සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Islam

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 6	**இஸ்லாம்**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **சரியான விடையின் கீழ் கோடிடுக**

1. அல்லாஹ்வின் தூதரிடத்தில் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது
   1) அல்குர்ஆனில் 2) ஹதீஸில் 3) வேத நூல்களில் 4) நூல்களில்

2. நீங்கள் ஒரு விடயத்தைச் செய்தால் உங்களுக்கு மத்தியில் அன்பு ஏற்படும் எனக் கூறப்பட்டுள்ள விடயம்
   1) பசித்தவருக்கு உணவளித்தல் 2) ஸலாத்தைப் பரப்புதல்
   3) நோய் விசாரித்தல் 4) கைதியை விடுதலை செய்தல்

3. ஸீரத்துர் ரசூல் எனக் குறிப்பிடப்படுவது
   1) நபி (ஸல்) அவர்களின் பிறப்பு 2) நபி (ஸல்) அவர்களின் இறப்பு
   3) நபி (ஸல்) அவர்களின் வரலாறு 4) நபி (ஸல்) அவர்களின் குணங்கள்

4. நபி (ஸல்) அவர்களுக்குப் பாலூட்டி வளர்த்த செவிலித்தாய்
   1) ஆமினா 2) கதீஜா 3) சுமையா 4) ஹலீமா

5. சிறுவர் முஹம்மதிடம் நபித்துவத்தின் அடையாளங்களைக் கண்ட கிறிஸ்தவ மத குரு
   1) வரக்கத் இப்னு நவ்பல் 2) புஹைரா 3) அபூசுபியான் 4) உத்பா

6. நபி (ஸல்) அவர்கள் கதீஜா (ரலி) அவர்களைத் திருமணம் செய்த போது இருவரினதும் வயது
   1) 30 - 40 2) 25 - 35 3) 25 - 40 4) 35 - 40

7. அல்குர்ஆனில் முதன் முதல் இறக்கப்பட்ட வசனங்கள் அடங்கியுள்ள சூரா
   1) சூரா முஸ்ஸம்மில் 2) சூரா பாத்திஹா 3) சூரா இக்லாஸ் 4) சூரா அலக்

8. முதன் முதலில் ஆண்களிலும் சிறுவர்களிலும் இஸ்லாத்தை ஏற்றவர்கள்
   1) அபூபக்கர் (ரலி), அலி (ரலி) 2) அபூபக்கர் (ரலி), உஸ்மான் (ரலி)
   3) உமர்(ரலி),உஸ்மான்(ரலி) 4) அபூபக்கர் (ரலி), உமர் (ரலி)

9. "உம்மஹாத்துல் மு.ஃமினீன்" என்பதன் பொருள்
   1) சொர்க்கவாசிகளின் அன்னையர் 2) மனிதர்களின் அன்னையர்
   3) ஏழைகளின் அன்னையர் 4) இறை நம்பிக்கையாளர்களின் அன்னையர்

Past Papers Wiki

10. "ரலியல்லாஹு அன்ஹு" என்று நாம் கூறும் சந்தர்ப்பம்
    1) அல்லாஹ்வின் பெயரை உச்சரிக்கும் பொழுது
    2) நபியின் பெயரை உச்சரிக்கும் பொழுது
    3) சஹாபாக்களின் பெயர்கள் உச்சரிக்கும் பொழுது
    4) பெற்றோர்களின் பெயர்கள் உச்சரிக்கும் பொழுது

- **அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சரியான விடையை தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**
  (அயல் வீட்டார், ஆமுல் ஹுஸ்ன், சஹாபாக்கள், அஹ்லுல் பைத்கள், அபுல் பஷர்)

11. நபி (ஸல்) அவர்களை தமது வாழ்நாளில் நேரடியாகக் கண்டவர்கள் ..... என அழைக்கப்பட்டனர்.

12. நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தவர்கள் ..... எனப்பட்டனர்.

13. கதீஜா (ரலி) அவர்கள் மரணமடைந்த ஆண்டு ..... எனப்படுகின்றது.

14 . ..... என ஆதம் (அலை) அவர்கள் அழைக்கப்படுகின்றார்கள்.

15. எவருடைய தீங்கைக்கண்டு ..... பயப்படுகிறார்களோ அவர்கள் மு.ீன்கள் அல்ல.

- **பின்வருவனவற்றில் சரியாயின் (✓)எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

16. பூமி தளம்பாது நிலை பெற அல்லாஹ் மலைகளை ஆக்கியுள்ளான். (.....)

17. இவ்வுலகில் இருப்பவை எல்லாம் மனிதனுக்குச் சொந்தமானவை ஆகும். (.....)

18. உயிருள்ள பிராணிகள் விடயத்தில் செய்யும் ஒவ்வொரு நல்லவற்றுக்கும் நிச்சயமாக கூலி உண்டு. (.....)

19. இஸ்லாம் மனிதன் பற்றி மட்டுமே பேசுகின்றது. (.....)

20. சல்மானுல் பாரிஸி (ரலி) அவர்கள் நெருப்பை வணங்கும் மஜூசி குடும்பத்தில் பிறந்தவர். (.....)

(20 x 2 = 40 புள்ளகள்)

பகுதி II

முதலாம் வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. சுருக்கமான விடை தருக.
   1. அல்லாஹு ஹாலிகுனா என்பதன் பொருள் யாது?
   2. சூழலை மாசுபடுத்தும் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
   3. அயல் வீட்டு உறவை முறித்து விடும் செயல்கள் இரண்டு தருக.
   4. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அல்லாஹ்வின் கோபத்துக்குள்ளானது ஏன்?
   5. அகில உலகப் பெண்களின் தலைவி என நபி (ஸல்) அவர்களால் பாராட்டப்பட்டவர் யார்?
   6. அகழி யுத்தத்தின்போது அகழி தோண்டுவதற்கு ஆலோசனை கூறிய சஹாபி யார்?
   7. அஸ்ஸித்தீகா, ஹுமைரா எனும் சிறப்பு பெயர்களால் அழைக்கப்பட்ட நபி (ஸல்) அவர்களின் மனைவி யார்?
   8. நபி (ஸல்) அவர்களின் ஆண் பிள்ளைகள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
   9. நபி (ஸல்) அவர்கள் குறைஷிகளால் எப்பெயர் கொண்டு புகழப்பட்டார்கள்?
   10. க.்.பாவில் பதிக்கப்பட்டுள்ள புனிதமான கல்லின் பெயர் என்ன?

(10 x2 = 20 புள்ளிகள்)

2. 1. மனித உடம்புக்குள் அல்லாஹ்வின் அற்புத ஒழுங்கமைப்பை காட்டும் இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.
   2. கப்ருடைய வாழ்வில் மனிதர்கள் எதிர்நோக்கும் அம்சங்கள் மூன்று குறிப்பிடுக
   3. அல்லாஹ்வைப் பற்றி ஒரு மு.்.மின் நம்பிக்கை கொள்ள வேண்டிய ஐந்து விடயங்களைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

3. 1. மலக்குமார்களுக்கும் மனிதர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் இரண்டு வீதம் தருக.
   2. இஸ்லாம் மார்க்கம் பற்றி மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.
   3. வுழுவின் பர்ளுகளைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

4. 1. தொழுகையை விடுவதால் ஏற்படும் தீமைகள் இரண்டு குறிப்பிடுக.
   2. நோன்பின் மூலம் வளர்க்கப்படும் நற்பண்புகள் மூன்று தருக.
   3. பெற்றோருக்குச் செய்ய வேண்டிய உபகாரங்கள் ஐந்து குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

5. 1. ஆசிரியர்களின் சிறப்புக்கள் இரண்டு தருக.

   2. ஒரு முஸ்லிம் பேண வேண்டிய நா ஒழுக்கங்கள் மூன்று குறிப்பிடுக.

   3. நமது தேவைகளைப் பிற்படுத்தி பிறரின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஐந்து குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

6. 1. அல்குர்ஆனை ஓதும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் இரண்டு தருக.

   2. அரேபியரின் கோத்திர முறையில் காணப்பட்ட பண்புகள் மூன்று தருக.

   3. உம்மஹாத்துல் மு.ஃமினீன்களில் ஐவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

7. 1. அஹ்லுல் பைத்களில் நால்வரைக் குறிப்பிடுக.

   2. அயலவர்களின் வகைகளைக் குறிப்பிடுக.

   3. உயிரினங்களோடு ஒரு முஸ்லிம் நடந்து கொள்ள வேண்டிய இஸ்லாம் கற்றுத்தரும் நடைமுறைகள் ஐந்து குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** - இஸ்லாம்

ISLAM விடைப்பத்திரம் - தரம் - 6

பகுதி – I

1. 1	6. 3	11. ஸஹாபாக்கள்	16. ✓
2. 2	7. 4	12. அஹ்லுல் பைத்கள்	17. x
3. 3	8. 1	13. ஆமூல் ஹுஸ்ன்	18. ✓
4. 4	9. 4	14. அபுல் பஷர்	19. x
5. 2	10. 3	15. அயல் வீட்டார்	20. ✓

பகுதி – II

(01)

1. அல்லாஹ் எம்மை படைத்தவன்
2. மரங்களை வெட்டுதல், வளியை மாசடையச் செய்தல் போன்றன.
3. சிறிய சிறிய விடயங்களைப் பெரிது படுத்துதல், சண்டையிடல் போன்றன.
4. சைத்தானின் மாய வார்த்தையை நம்பி அல்லாஹ்வுக்கு மாறு செய்தமை.
5. பாத்திமா (ரழி)
6. ஸல்மானுல் பாரிஸி (ரழி)
7. ஆயிஷா (ரழி)
8. இப்ராஹீம், காஸிம், அப்துல்லாஹ்
9. அஸ்ஸாதிக், அல் அமீன்
10. ஹஜ்ருல் அஸ்வத் (2 x 10 = 20 புள்ளிகள்)

(02)

1. சுவாசத் தொகுதி, நரம்புத் தொகுதி போன்றன.
2. - மனிதர்கள் மீண்டும் உயிரூட்டப்படுவார்கள்.
   - விசாரணை நடைபெறல்
   - சுவனப் பூங்கா அல்லது அல்லது நரகின் கிடங்காக மாறுதல்.
3. - அவனே எம்மைப் படைத்தவன்.
   - அவனே எமக்கான வாழ்க்கை வசதிகளை செய்து தருபவன்.
   - எமது பாவங்களை மன்னிப்பவன்.
   - எமக்கு நேர்வழி காட்டுபவன்.
   - அவன் மிகத் தூய்மையானவன் போன்றன...

(03)

1. - மலக்குள் ஒளியால் படைக்கப்பட்டார்கள்.
   - மனிதர்கள் மண்ணால் படைக்கப்பட்டவர்கள்.
   - மலக்குகள் செயலிலடங்குகிறார்கள்.
   - மனிதர்கள் சொல்லில் அடங்குகிறார்கள் போன்றன...
2. - இஸ்லாம் அல்லாஹ் அருளிய மார்க்கம்.
   - இஸ்லாம் இயற்கை மார்க்கம்.
   - எப்போதும் பின்பற்றத்தக்க மார்க்கம் போன்றன...

3. - நிய்யத் வைத்தல்.
   - முகத்தை முழுமையாக கழுவுதல்.
   - இரு கைகளையும் முழங்கை உட்பட கழுவுதல்.
   - தலையை மஸ்ஹு செய்தல்.
   - இரு கால்களையும் கரண்டைக் கால் வரை கழுவுதல்.
   - ஒழுங்கு முறைப்படி செய்தல்.

(04)

1. - இறை நிராகரிப்பாளருக்கு தரமாக இருத்தல்.
   - ஸகர் எனும் நரகில் நுழைதல் போன்றன...

2. - இறையச்சம் ஏற்படும்.
   - உள்ளம் பண்படுத்தப்படும்.
   - பொறுமையை ஏற்படுத்தும் போன்றன...

3. நன்றி செலுத்துதல், அவர்களுக்காகப் பிரார்த்தித்தல், கனிவாகப் பேசுதல், அவர்களின் சொல்லைக் கேட்டல், அன்பாகவும் இரக்கமாகவும் நடந்து கொள்ளல் இவை போன்றன...

(05)

1.

2. - பேசினால் நல்லதையே பேச வேண்டும்.
   - புறம், கோள், திட்டுதல், குறை கூறல், பட்டப்பெயர் சூட்டுதல் கூடாது.
   - வார்த்தைகளால் பெருமையடிக்க கூடாது.
   (இவை போன்றன)
3. - கண் தெரியாத ஒருவரின் தேவையை நிறைவேற்றல்.
   - பேரூந்தில் செல்லும் போது முதியோருக்கு இடமளித்தல்.
   - வைத்தியசாலையில் வரிசையில் செல்லும் போது கடுமையான நோயாளிக்கு முன்னுரிமை அளித்தல்.
   (இவை போன்ற விடைகள்)

(06)

1. - வுழூச் செய்து சுத்தமாக இருத்தல்.
   - உடல், உடை என்பவற்றைச் சுத்தமாக வைத்துக் கொள்ளல் போன்றன...

2. - ஒழுங்கான குடும்ப அமைப்போ சமூக அமைப்போ அங்கு காணப்படவில்லை.
   - பெண்கள் இழிவாக நடத்தப்பட்டனர்.
   - மக்கள் கோத்திரங்களாகப் பிரிக்கப்பட்டிருத்தல் போன்ற விடயங்கள்...

3. கதீஜா (ரழி), ஸஹ்தா (ரழி), ஆயிஷா (ரழி), ஹப்ஸா (ரழி), உம்மு ஹபீபா (ரழி)
   இவை போன்ற விடயங்கள்...

(07)

1. ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி), ஹம்ஸா (ரழி), அலி (ரழி)

2. - அயல் வீடுகளில் வாழும் உறவினர்கள்.
   - அயல் வீடுகளில் வாழும் முஸ்லிம்கள்.
   - அயல் வீடுகளில் வாழும் முஸ்லிம் அல்லாதவர்கள்.

3. - இரக்கம் காட்டுதல்.
   - அளவுக்கதிகமான சுமைகளை ஏற்றாதிருத்தல்.
   - துன்புறுத்தல் கூடாது.
   - உயிரினங்களின் உறுப்புகளை விற்கக் கூடாது.
   - தாயையும் சேயையும் பிரித்தல் கூடாது.
   - நோயுற்றால் சிகிச்சையளித்தல் போன்றன...

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank